# ஆண்டறிக்கை 2011

## தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி
அதிகாரசபை
மட்டம் 2, West Wing, செலிங்கோ ஹவுஸ்,
இல. 69, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
06/02/2013

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

த.பெ. 570, 73/1, காலி வீதி

கொழும்பு 03.

கனம் ஐயா,

**<u>2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை</u>**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) பந்தியின் பிரகாரம், கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன்.

1. 2011 ஆம் ஆண்டிக்கான தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்ற அறிக்கை.
2. 2011 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை, 2011 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான வரவு செலவுக் கூற்றுக்கள், மற்றும் 2011 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான பண ஓட்டக் கூற்றுக்கள்
3. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

இப்படிக்கு உண்மையுள்ள

என்.எம். ஷஹீட்

தலைவர் / பணிப்பாளர் நாயகம்

**நோக்கு**

**“சக்தி வாய்ந்ததும், நிலைத்து நிற்கக் கூடியதும் போட்டிமிக்கதுமான தொழில் முயற்சித் துறையை உருவாக்குதல். இது தேசத்தின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக அபிலாஷைகளுக்கு பங்களிப்புச் செய்யும்.”**

**“இலங்கையின் தேசிய பொருளாதாரத்துடன் என்றும் தொடர்புபடக்கூடிய ஒரு துறையாக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் மற்றும் போட்டித் தன்மைக்கும் உதவியளித்தலும் ஆதரவளித்தலும்”**

**செயற்பணி**

# தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கம்

- இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி அபிவிருத்தியை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், மற்றும் வசதியளித்தல் ஆகியவற்றின் மூலம் வளர்ச்சிக்காகத் தூண்டுதல், இலங்கையின் பொருளாதாரத்தை விரிவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

- தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வெளி நாட்டுச் சந்தைகளை வெற்றி கொள்ளக் கூடிய தொழில் முயற்சியை சர்வதேசமயப்படுத்துவதின் மூலம் இலங்கைக்கு வெளியில் தொழில் முயற்சிகளை அமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தூண்டுதலும் அதற்காக ஊக்குவித்தலும்.

- கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளின் அபிவிருத்தி, வர்த்தகத்தை மேம்படுத்துதல், மற்றும் வினைத் திறன் மிக்க ஒத்துழைப்பை வழங்குதல் போன்றவற்றுக்குப் பொருத்தமானதாகத் தயாரிக்கப்பட்ட கொள்கை, வளர்ச்சிக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் திட்டமிடல்.

- தொழில் முயற்சி அபிவிருத்திக்காக தொடர்ந்தும் இருக்க வேண்டிய துறையாக மானிட மூலதன அபிவிருத்திக்கான புதிய தொழில் நுட்பத் திறன்களைக் கொண்ட மக்களுக்கு அதிகாரமளித்தல்

- அபிவிருத்தித் தேவைகளை எதிர்க்கொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

- தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்பாடு என்பவற்றுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு வசதியளித்தல்.

- உற்பத்தி அபிவிருத்தி, தொழில் நுட்ப அபிவிருத்தி, தனியுரிமைப் பத்திரத்தை வர்த்தகமயப்படுத்தல் போன்றவை தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கையின் வளர்ச்சிக்காக தொழில் நுட்ப அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்.

- பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளித்தல்.

## 2011 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை

01. **திரு. எம். எஸ். எஸ். அமீர் அலி**
தலைவர் / பணிப்பாளர் நாயகம்

02. **திரு. எம். ஏ. தாஜுதீன்**
மேலதிகச் செயலாளர் - கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
பதவி வழி – பணிப்பாளர் சபை

03. **திரு. ரீ. என். ஓஸன்**
பணிப்பாளர் – நிதி அமைச்சின் அரசாங்க நிதித்
திணைக்களம்
பணிப்பாளர் சபை

04. **வண. ஏல்பிட்டியே சுகுனாகித்தி தேரர்**
பணிப்பாளர் சபை

05. **திரு. ஏ. எல். மொஹமட் ஹாலீக்**
பணிப்பாளர் சபை

06. **திரு. எஸ். லுக்மான்**
பணிப்பாளர் சபை

07. **திரு. என். எம். ஷஹீட்**
பணிப்பாளர் சபை

08. **திரு. எம். ஏ. சீ. எம். அமீன்**
பணிப்பாளர் சபை

09. **திரு. எஸ். ஹேரத்**
பணிப்பாளர் சபை

# 01. தொழில் முயற்சிக் கொள்கை

## இலங்கைத் தொழில் முயற்சியாளர்களை வலையமைப்புடன் இணைப்பதை நோக்கி

### 1.1 தேசிய தொழில் முயற்சி மன்றம் :

கீழ் மட்டங்களில் தீர்க்கப்படாத பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கான நிறுவன ரீதியான கட்டடத்தின் உயர் மட்டம் தேசிய தொழில் முயற்சி மன்றமாகும். இந்த மன்றமானது கொள்கை வடிவமைப்பு நோக்கங்களுக்கான விடயங்களைப் பயன்படுத்தலாம். மன்றத்தை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுக்கு ஓர் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 தேசிய தொழில் முயற்சி மன்றம்:

வியாபாரச் சமுதாயத்தினரின் பல்வேறு மட்டங்களுக்கிடையில் கூட்டிணைப்புக்காகவும் தொடர்பாடலுக்காகவும் நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஊக்கவிக்கின்றது. (தயவுசெய்து இணைப்பு ஐ ஐப் பார்க்க) தேசிய தொழில் முயற்சி மன்றமானது பல்வேறு பணயப்பொருளாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் மட்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது. தேசிய ரீதியில் அடையாளங் காணப்பட்ட வியாபார விடயங்களும் கட்டமைப்பின் அடி மட்டங்களில் தீர்க்கப்படாததுமான விடயங்களும் தேசிய தொழில் முயற்சி மன்றத்தில் கலந்துரையாடப்படுகின்றன. இது வரையில் மூன்று கூட்டங்கள் நடாத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு :

i. தொழில் முயற்சிகளுக்கான மின்சாரத்தின் வரையறை
ii. பாடசாலையை விட்டு வெளியேறியவர்களின் தொழில் முயற்சி ஆற்றல்களை மேம்படுத்துதல்.
iii. கால்நடைக் கொள்கையும் தொழில் முயற்சிகளுக்கான அதன் பிரயோகத் தன்மையும்.
iv. தொழில் முயற்சிகளுக்கான சிறந்த சேவைகளை வழங்குவதற்கு அரசாங்க தனியார் கலந்துரையாடல் (PPD)
v. அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்ட மட்டங்களில் வியாபாரப் பதிவின் தாமதங்கள்
vi. அநுராதபுரத்தில் வியாபாரங்களுக்கான காணிப் பதிவின் சாத்தியமின்மை
vii. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்கான கடன் வீத முறைமை

### 1.3 மாவட்டத் தொழில் முயற்சி மன்றம்:



தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டுறவுத் திட்டத்தின் பிரகாரம், தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதற்கு மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களைத் தாபிப்பதனை அது உள்ளடக்குகின்றது. மாவட்டத் தொழில் முயற்சி மன்றம் மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்படுகின்ற அதேவேளையில், அது அரசாங்க மற்றும் அரசாங்கம் சாராத வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்கள், வர்த்தகச் சங்கங்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள வணிக அல்லது வியாபார அமைப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

**நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் :**

- மாவட்ட மட்டத்தில் உள்ள வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களிடையே உறவுகளைக் கட்டியெழுப்புதல்
- அரசாங்க தனியார் கலந்துரையாடல்களுக்கு உதவுதல் (ீனு)
- மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி அமைப்புக்களுக்கிடையில் சரியான கூட்டிணைப்பைத் தாபித்தல்
- மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களினூடாக தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதற்கு ஒரு முறையை விருத்தி செய்தல்
- மாவட்ட மட்ட மன்றங்களிலிருந்து தேசிய மட்ட மன்றங்கள் வரையான வியாபார விடயங்களைச் சேகரித்தல்.


தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, நிதி மற்றும் தொழில் நுட்ப வழிகாட்டலின் ஆதரவுடன் இந்த மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களை பலப்படுத்தி வருகின்றது. அத்துடன், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியினர் மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களின் முன்னேற்றத்தின் அடிப்படையில் வழிகாட்டலுக்காகவும் நிதி ஆதரவுகளை வழங்குவதற்காகவும் மன்றத்தின் கூட்டங்களுக்கு சமூகமளிப்பார்கள்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அநுராதபுரம், காலி, யாழ்ப்பாணம், ஹம்பாந்தொட்டை, மொனராகலை, பொலநறுவை, மன்னார், கண்டி, மாத்தளை, அம்பாறை, மட்டக்களப்பு, பதுளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்கில் தாபிக்கப்பட்டுள்ள மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, திருகோணமலை, மாத்தறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிலுள்ள பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவின் உத்தியோகத்தர்களிடமிருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்ற அதேவேளையில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி அவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான செயலமர்வை நடாத்தியுள்ளது. மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்காக மாவட்ட மன்ற உத்தியோகத்தர்களுக்காக விழிப்புணர்வு மற்றும் அனுபவப் பகிர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு செயற்படத்தப்பட்டுள்ளன. மேலும், கொழும்பு மற்றும் தம்புள்ளை ஆகிய இடங்களிலுள்ள FCCISL இன் ஒத்துழைப்புடன் மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான இரண்டு செயலமர்வுகளை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நடாத்தியுள்ளது.

## 02. தகவலுக்கான அணுகுகை

### 2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி வழிகாட்டி நூல்:




தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2009 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி வழிகாட்டி நூலொன்றை அறிமுகப்படுத்தியது. வர்த்தகச் சமுதாயத்திலிருந்து கிடைத்த பெரும் பாராட்டுதலின் காரணமாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி வழிகாட்டி நூல் 2011-1012 இனை மீளாய்வு செய்து வெளியிடுவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சிந்தித்தது. இந்த வழிகாட்டி நூல் தொழில்முயற்சியாளர்களுக்கு அத்தியவசியமான நிதி மற்றும் நிதிசாராத வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்கள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கியுள்ளது. இந்த வழிகாட்டி நூலின் இலக்குக் குழுவினர், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்கள், விசேடமாக பிராந்தியத்தில் இருப்பவர்கள் ஆவர். சிறிய மற்றும் நடுத்தர அளவு

தொழில்முயற்சியாளர்கள் நிறுவனங்களைத் தேடுவதற்காக தமது பெறுமதியான நேரத்தை வீணடிக்காமல் உள்நாட்டில் சேவைகளைப் பெறுவதற்கு எங்கு போக வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு இது ஒரு சிறந்த தகவல் மூலமாக இருக்கின்றது. வங்கிகளின் சேவைகளுக்கான நிலையம் இதே மாதிரியானதுதான். இந்த வழிகாட்டி நூல் அநேகமாக அபிவிருத்தி மற்றும் ஏனைய விசேட கடன் திட்டங்கள் சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் உள்ளடக்கியிருக்கின்றது. இந்த வழிகாட்டி நூல் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 6 வணிக வங்கிகளிலிருந்து அனுசரணைகளைப் பெறக் கூடிய அரசாங்க தனியார் கலந்தரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு அச்சிடப்படுகின்றது.

### 2.2 தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம்:



கொள்ளளவை அதிகரிப்பதற்காகவும், தரத்தை மேம்படுத்து வதற்காகவும் தகவல்களை அடைவதற்காகவும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் மீளமைக்கப்பட்டுள்ளது. பின்வரும் தகவல்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன.

i. வழிகாட்டி நூலின் இலத்திரனியல் வடிவம்
ii. கொள்கை ஆவணங்கள் மற்றும் கொள்கை மீளாய்வு முறை
iii. தொழில் முயற்சி அபிவிருத்தி விடயத்தைக் கற்பிக்கும் நிகழ்ச்சிகளின் வீடியோக்கள்
iv. மன்றங்கள் சம்பந்தமான தகவல்கள்
v. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில் முயற்சி அபிவிருத்தித் தலையீடுகள்
vi. செய்திகள்
vii. மாதிரி வியாபாரத் திட்டங்கள்

## 03. இலங்கையில் தயாரிக்கப்பட்டது என்பதை நோக்கி

### 3.1 தொழில் முயற்சித்துவக் கலாச்சாரத்தைச் செழிப்பாக்குதல்

#### "கமட்ட ஒபின் வியாபாரய" நிகழ்ச்சித் திட்டம்:



இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கையில் தீர்க்கமான பங்களிப்பை ஆற்றுவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் அடையாளங்காணப்பட்டுள்ள அதேவேளையில், வறுமையை ஒழிப்பதற்கு மிக முக்கியமானதாகவும் வேலைவாய்ப்பின்மைக்கான ஒரு தீர்வாகவும் இது காணப்படுகின்றது. இலங்கையில் சனத்தொகையில் பெரும்பான்மையானவர்கள் கிராமப் பகுதிகளில் வசித்து வருகின்றனர். அது மொத்தச் சனத்தொகையில் 78% என மதிப்பிடப்பட்டுள்ளன. பிராந்தியப் பகுதிகளிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் வேலைவாய்ப்பு மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சித் துறை அபிவிருத்தியின் பாரிய மூலமாகவுள்ளன.

ஏனைய நாடுகளுடன் ஒப்படும் போது இந்தத் துறையானது எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு மட்டத்தை அடையவில்லை என்பது தெளிவானதாகும்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, சிறிய மற்றும் நடுத்தர அளவான

தொழில்முயற்சிகளை விசேடமாக நாட்டிலுள்ள பிராந்தியப் பகுதிகளில் மேம்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ள அதேவேளையில், கிராம மட்டத்தில் வியாபாரத்தை மேம்படுத்துவதற்கு ‘‘கமட்ட ஒபின் வியாபாரய’’ என அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. மஹிந்த சிந்தனை வழியில் முன்நோக்கிச் செல்வதற்கு நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. இது தொழில்முயற்சியாளர்களினால் வியாபாரத்தை அடையாளங் கண்டு தெரிவு செய்வதற்கு வழியமைப்பதற்கான தர்க்கரீதியான அடிப்படையை வழங்கும்.

### இந்த நிகழ்ச்சித் திட்டம் மூன்று பாரிய ஆக்கக் கூறுகளை உள்ளடக்குகின்றது :

1. கொடுக்கப்பட்ட ஒரு புவியியல் ரீதியான பகுதியில் ( மாவட்ட மட்டத்தில்) போட்டிக்குரிய வியாபாரத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக போட்டிக்குரிய வியாபார வாய்ப்புக்கள், பிரச்சினைகள் மற்றும் யோசனைகள் என்பவற்றை அடையாளங் காணுதல்.
2. சரியான வியாபாரங்களுடன் தொழில்முயற்சியாளர்களைத் தொடர்புபடுத்தல்.
3. நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் நடவடிக்கையினால் யோசனை முன்வைக்கப்பட்ட துறை அபிவிருத்திப் பிரேரணைகளை செயற்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஆக்கக் கூறினூடாக, ‘‘கமட்ட ஒபின் வியாபாரய’’ நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பிராந்திய வியாபார மாதியை அபிவிருத்தி செய்வதன் மூலம் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பிராந்திய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை மேம்படுத்துகின்ற அதேவேளையில், ஏனைய கிராமியச் சமுதாயங்களை ஊக்குவிக்கின்றது.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, முதற் கட்டமாக குருநாகல், கண்டி, மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ‘‘கமட்ட ஒபின வியாபார’’ நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது ஆக்கக் கூறினைப் பூர்த்தி செய்துள்ளது. அத்துடன் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஆதரவுடன் நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது ஆக்கக் கூறினை தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்துள்ளது. மூன்று மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|
| **குருநாகல்** | பன்னல<br>மாஹோ<br>குருநாகல்<br>பொல்கஹவெல<br>நாரம்மல |
| **மட்டக்களப்பு** | கோரலைப்பற்று மேற்கு<br>கோரலைப்பற்று மத்தி<br>களவாஞ்சிக்கடி<br>கோரலைப்பற்று தெற்கு<br>கோரலைப்பற்று |
| **மன்னார்** | முசலி<br>மாந்தை மேற்கு<br>மடு |







பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஆதரவுடன் நன்மை பெறுநர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் பத்து தொழில்முயற்சியாளர்களைத் தெரிவு செய்து நிதி, தொழில் நுட்பம், மற்றும் சந்தை ஆகியவற்றுக்கான அணுகுகைக்காக அவர்களுக்கு வழிகாட்டும் அதேவேளையில் வெற்றிகரமான சுயாதீன வியாபாரத்தின் பக்கம் அவர்களை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை விரும்புகின்றது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஆதரவுடன் பன்னலையில் பத்து தொழில்முயற்சியாளர்களைத் தெரிவு செய்து, தனியாள் வியாபாரத் திட்டங்களைப் பூர்த்தி செய்து, அவர்களுடைய வியாபார நடவடிக்கைகளுக்கான மாணியங்களை வழங்கியுள்ளது.

## 3.2 இலங்கைத் தொழில் முயற்சியாளர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல்

### தொழில் நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்:



தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டத்தினதும், கூட்டுறவுத் திட்டத்தினதும் பிரகாரம், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தொழில் நுட்பப் பரிமாற்றம் மற்றும் தொழில்முயற்சித்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. தற்போது அநேகமான மக்கள் தொழில்நுட்ப திறன்களின் பற்றாக்குறையுடன் வியாபாரத்தில் அல்லது வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் அவர்களின் உற்பத்திகளின் தரம் மிகக் குறைவாக இருக்கின்றது. அதனால் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அவர்களின் தொழில்நுட்ப அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கு பல்வேறு பிராந்தியங்களில் தொழில் நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது உள்நாட்டு போட்டிக்குரிய நன்மை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கள அவதானிப்புகளினூடாக தொழில் நுட்பப் பயிற்சித் தேவைப்பாடுகளை அடையாளங் கண்டுள்ளது.

கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, பல்வேறு பிராந்தியங்களில் ஒன்பது தொழில் நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | அமைவிடம் | நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| உணவு தயாரிப்பு | மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை, ஓட்டமாவடி, களுவாஞ்சிக்குடி, ஆரயம்பதி மற்றும் வெள்ளாவெளி | 151 |
| | திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் | 60 |
| ஆடை தயாரிப்பு நிகழ்ச்சித் திட்டம் | திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் மற்றும் கிண்ணியா | 165 |
| **மொத்தம்** | | **376** |

குருநாகல் மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் புதிய தொழில் நுட்பங்களை அடையாளங் காணுவதற்கு மாவட்டச் செயலக அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தும்பு மற்றும் தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியாளர்களுக்காக குருநாகல் மாவட்டத்திற்கான தடைநீக்க விஜயமொன்றை தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஐம்பது தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியாளர்கள் பங்குபற்றினர்.

மேலும், கண்டி மாவட்டத்திலுள்ள கைப்பணித் துறையின் தற்போதைய போக்குகள் மற்றும் தரங்கள் தொடர்பான செயலமர்வை தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்றியது. தோடர்புடைய தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களும் கைப்பணித் தொழில்முயற்சியாளர்களும் இந்த செயலமர்வில் பங்குபற்றினர். இந்த செயலமர்வின் நோக்கம் தற்போதைய போக்குகள் மற்றும் தரங்கள் என்பவற்றைப் பற்றி தொழில்முயற்சியாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவதாக இருந்த அதேவேளையில், இந்த செயலமர்வு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வழிகாட்டலின் கீழ் கண்டி மாவட்ட மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

## தொழில் முயற்சித்துவ அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்:



கூட்டுறவுத் திட்டத்தின் பிரகாரம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் மாவட்டச் சம்மேளனம் ஆகியவற்றின் ஆதரவுடன் பிராந்திய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்காக வியாபார அபிவிருத்திப் பயற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது. நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள், பங்குபற்றுநர்களின் தொழில்முயற்சித்துவத் திறன்களை மேம்படுத்துதல், என்பனவாகும்.

நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்,

-  அவர்களது பொருட்களினதும் சேவைகளினதும் தரத்தையும் வினைத் திறனையும் மேம்படுத்துதல்
-  பங்குபற்றுநர்களின் தொழில்முயற்சித்துவத் திறன்களை மேம்படுத்துதல்,
-  அவர்களுடைய இலாபங்களை மேம்படுத்துதல்,
-  பங்குபற்றுநர்கள் வியாபார வலையமைப்புக்கு காட்டப்படுவர்
-  முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துதல்,
-  நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்

முகாமைத்தவ மேம்பாடுகள் மற்றும் தொழில் நுட்பத் திறன்கள் என்பவற்றை இலக்காகக் கொண்டு ஒழுங்கான பயற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக பொருத்தமான அமைவிடங்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | அமைவிடம் | நன்மைபெறுநர் களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர்கள் | பொலநறுவை மாவட்டத்தில் ஹிங்குரக்கொடை | 35 |
| தரம் மற்றும் வினைத்திறன் | புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் | 35 |
| மனித வள முகாமைத்துவம் | இரத்தினபுரி | 24 |
| மனித வள முகாமைத்துவம் | புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் | 22 |
| உற்பத்திச் செலவு மற்றும் விலையிடல் | அநுராதபுரம் | 25 |
| மனித வள முகாமைத்துவம் | குருநாகல் | 30 |
| மனித வள முகாமைத்துவம் | அநுராதபுரம் | 29 |
| நிதி தொடர்பாக தீர்மானமெடுத்தல் வரிவிதிப்பு மற்றும் கணக்கீடு | குருநாகல் மாவட்டத்தில் எஹட்டுவெவ | 36 |
| **மொத்தம்** | | **236** |

“திவி நெகும” தேசிய நிகழ்ச்சித் திட்டம் :



பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு என்பன திவி நெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் “திவி நெகும” குடிசைக் கைத்தொழில் தொகுதி மேம்பாட்டுக் கண்காட்சிகளை ஒழுங்குசெய்துள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இந்தக் கண்காட்சிக்குப் பங்களிப்புச் செய்யுமாறு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்தக் கண்காட்சியானது 21 மாவட்டங்களுக்காகவும் திட்டமிடப்பட்டுள்ள அதேவேளையில் 13 கண்காட்சிகள் இந்த ஆண்டில் நடாத்தப்படவிருக்கின்றன.

இந்த வருடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்க செய்யப்பட்ட சகல கண்காட்சிகளிலும் ( ஏழு கண்காட்சிகள்) தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பங்குபற்றியுள்ளது. அத்துடன் “திவி நெகும” நன்மை பெறுநர்களுக்கான பயிற்சி மற்றும் வசதியளித்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டது. அநுராதபுர மாவட்டத்தில் நன்மை பெறுநர்கள் 9 பேருக்கான பால் மற்றும் கோழிப் பண்ணை முகாமைத்துவம் மற்றும் உணவு தயாரிப்புப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன நடாத்தப்பட்டன.

### சந்தனக் குச்சி உற்பத்தி

தற்போது வருடாந்தம் ரூபா 300 மில்லியன் செலவில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் சந்தனக் குச்சி உற்பத்தியை இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருட்டு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பணயப்பொருளாளர் செயலமர்வுகளை நடாத்தியது. உள்நாட்டு சந்தனக் குச்சி உற்பத்திக்கு வசதியளிக்கும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

01. செஸ் வரியை அதிகரித்தல்
02. தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
03. மூலப் பொருள் உற்பத்தியை மேம்படுத்தல் (கரித்தூள், மூங்கில் குச்சிகள் போன்றன)

கையால் இயக்கப்படும் சந்தனக் குச்சி இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கான பிரேரணை

## 04. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான பங்களிப்பு

**“தெயட்ட கிருல” தேசிய கண்காட்சி:**



அநுராதபுர மாவட்டத்தில் இடம்பெற்ற “தெயட்ட கிருல” தேசிய கண்காட்சி – 2012 இல் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பங்குபற்றியது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அநுராதபுர மாவட்ட மன்றத்தின் ஆதரவுடன் பிரதேச செயலக மட்டத்தில் 11 கிராமிய தொழில் முயற்சி மன்றங்களைத் தாபித்து அநுராதபுர மாவட்டத்தில் (தம்புத்தேகம மற்றும் நுவரகம்பலாத பிரதேச செயலகப் பிரிவுகள்) 71 தொழில்முயற்சியாளர்களுக்காக மூன்று தொழில்முயற்சித்துவ அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது. பதினொரு பிரதேச மட்ட தொழில்முயற்சி மன்றங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டில் புத்தளையில் இடம்பெற்ற “தெயட்ட கிருல” தேசிய கண்காட்சியில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பங்குபற்றியுள்ள அதேவேளையில், வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக கூட்டத்தை செயலூக்கப்படுத்துவதற்காக நேரடி வீதி நாடகங்களை நடித்துக் காட்டியது.

### 4.1 இலங்கையில் புதிதுபுனையும் வியாபாரக் சலாச்சாரத்தைப் போசித்தல்

**தொழில் நுட்ப அபிவிருத்தி நிதியம்:**



இலங்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் (TDF) ஒன்றைத் தாபிப்பதற்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றைத் தயாரித்து அதனை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு அனுப்பியுள்ளது. அதன் பெறுபேறாக தொழில்நுட்பப் பரிமாற்றத்தினூடாக ஆய்வினை வர்த்தகமயப்படுத்துவது தொடர்பான ஒரு செயற்குழு தாபிக்கப்பட்டது. அதே நேரத்தில் மலேசிய தொழில்நுட்ப அபிவிருத்திக் கூட்டத்தாபனத்திடமிருந்து (MTDC) தொழில் நுட்ப உதவியைப் பெறும் சாத்தியத் தன்மை குறித்து தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆராய்ந்தது. மலேசிய தொழில்நுட்ப அபிவிருத்திக் கூட்டத்தாபனம் இலங்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதன் சாத்தியத் தன்மையைப் பரிசோதிக்கும் பிரேரணையொன்றை சமர்ப்பித்தது. அதன் பின்னர் அது, செயற்குழுவின் சிபாரிசுக்காக அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## 05. தொகுதி அணுகுகையினூடாக கைத்தொழில் போட்டித் தன்மையை மேம்படுத்தல்

### மொரட்டுவை மரத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்



தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையானது, தனது புவியியல் ரீதியான தொழில் முயற்சித்துவத் தொகுதி அபிவிருத்தி (GECD) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உலகலாவிய இணைத் தொகுதிகளுடன் வியாபாரச் சூழ்நிலையை மேம்படுத்தல், உள்நாட்டுப் பொருளாதார நல்லாட்சி மற்றும் வியாபார இணைப்புகளை விருத்தி செய்தல் என்பவற்றினூடாக உலகலாவிய போட்டிக்குரிய தொழில்முயற்சித் தொகுதிகளாக மொரட்டுவை மரத் தொகுதி மற்றும் வேவல்தெனிய பிரம்புத் தொகுதி என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு, 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் உப பிரிவு (I) மற்றும் 14(g) பிரிவுகளின் கீழ் விசேட பொருளாதார வலையங்களாக (SEZs) அவற்றைப் பிரகடனப்படுத்தவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் உள்ளூர்மயப்படுத்தப்பட்ட நமக்கிடையேயான நிறுவனம் மற்றும் நமக்கிடையேயல்லாத நிறவன வியாபார இணைப்புகளை உபயோகத்திற்குக் கொண்டுவருவதன் மூலம் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியைப் பெறுவதற்கு தொழில்முயற்சித்துவ அபிவிருத்தியை மேம்படுத்தி வசதியளித்து உள்நாட்டில் போட்டிமிக்க தொழில்முயற்சித் தளம் ஒன்றை உருவாக்குவதற்கு தொகுதி நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை முறைசாராத புவியியல் தொகுதியாக மொரட்டுவையை அடையாளங் கண்டுள்ள அதேவேளையில், அபிவிருத்திப் பங்காளர்களின் ஆதரவுடன் கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளை விரிவுபடுத்துவதன் மூலம் அதனை ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு தொகுதியாக அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளைப்
பூர்த்தி செய்துள்ளது.

- NCCI யின் ஒத்துழைப்புடன் மொரட்டுவை மரத் தளபாடத் தொகுதிக்கான சுய உதவிப் பொது அமைப்பாக சோ மில்லர்ஸ் அசோசியேஷன், வுட் வேர்க்ஷொப் ஓனர்ஸ் அசோசியேஷன் மற்றும் பேனிஷர் ஷொப் ஓனர்ஸ் / ட்ரெடர்ஸ் அசோசியேஷன் ஆகியவற்றை ஒன்று செர்ப்பதன் மூலம் மொரட்டுவ யுனைடட் வுட் கிராப்ட் அசோசியேஷன் தாபிக்கப்பட்டது.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுடன் மொரட்டுவை மற்றும் வேவல்தெனிய தொகுதிகளின் விசேட தரவுத்தள அபிவிருத்தி தொடர்பாக நகர திட்டமிடலாளர் அவையினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை மதிப்பீடு செய்யப்பட்டது.

- பணயப்பொருளாளர்களின் ஒத்துழைப்புடன் மொரட்டுவை மரத் தளபாடத் தொகுதியின் அபிவிருத்திக்கான முகாமைத்துவக் கம்பனியொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- திரு. ப்ரொகோனி அவர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அவுஸ்திரேலிய நிறுவனமான VAM நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் கட்டபெத்தயிலுள்ள மர வேலைப் பயிற்சி நிலையத்தை சர்வதேச மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கு ஒரு செயற் திட்டப் பிரேரணையை விருத்தி செய்வது தொடர்பாக கைப்பணிச் சபை, அரசாங்க மரக் கூட்டத்தாபனம், இலங்கை தேசிய கைப்பணிகள் சபை, கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மற்றும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு அகியவற்றுடன் கூட்டங்கள் ஒழங்கு செய்யப்பட்டன.

- மொரட்டுவை மரத் தளபாடத் தொகுதியை கைத்தொழில் மற்றம் வணிக அமைச்சின் விசேட பொருளாதார வலயமாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பான வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களை வரைதல்

- தொகுதி அபிவிருத்திக்கான அபிவிருத்தி பங்காளர்கள் அடையாளங் காணப்பட்டு அவர்களுடன் ஆரம்பக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கை தேசிய கைப்பணிகள் சபையின் (NCCSL) ஆதரவுடன் மொரட்டுவ யுனைடட் வுட் கிராப்ட் அசோசியேஷனைப் பதிவு செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- மொரட்டுவைப் பல்கலைக் கழகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் SEEDS என்பவற்றின் பங்கபற்றுதலுடன் அபிவிருத்தி பங்காளர் மாநாடு இடம்பெற்றன. இந்த மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில், Njrpa njhopy; Kaw;rp mgptpUj;jp mjpfhurigapdhy; jahupf;fg;gl;Ls;s தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அந்தந்த ஆக்கக் கூறுகளைச் செயற்படுத்துவதற்கு அபிவிருத்தி பங்காளர்களுடன் கைச்சாத்திடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- தளபாடத் தொகுதி அபிவிருத்தியிலுள்ள பொதுவான பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கான தகவலை அடையாளங் காணுவதற்காகவும் தளபாடத் தொகுதி அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் மொரட்டுவ யுனைடட் வுட் கிராப்ட் அசோசியேஷன் ஆகியோருடனான ஒரு நாள் செயலமர்வு பூர்த்தி செய்யப்பட்டது.

- பிங்கிரிய, கம்பஹா, தங்கொட்டுவ, நீர்கொழும்பு, மற்றும் குளியாப்பிட்டிய அகிய இடங்களில் நான்கு (04) சிறிய தளபாடக் கண்காட்சிகளை நடாத்தியது.

### வேவல்தெனிய தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்:

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை முறைசாராத புவியியல் தொகுதியாக வெவல்தெனியவை அடையாளங்கண்டுள்ள அதேவேளையில், அபிவிருத்திப் பங்காளர்களின் ஆதரவுடன் கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளை விரிவுபடுத்துவதன் மூலம் அதனை ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு தொகுதியாக அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

வேவல்தெனிய பிரம்புத் தொகுதியில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள அபிவிருத்தி முன்னெடுப்புக்களை பயன்மிக்கதாகச் செயற்படுத்துவதற்கு தனது தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளை விரிவுபடுத்துவதற்கு அபிவிருத்திப் பங்காளராக சணச வங்கியை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை தெரிவு செய்துள்ளது. அதனால் அபிவிருத்திப் பங்களிப்பையும் தீர்மானித்துள்ள பணிகளையும்இரண்டு அபிவிருத்திப் பங்காளர்களினதும் அதாவது சணச மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் பொறுப்புக்களையும் குறித்தொதுக்குவதற்கும் “சணச” வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை விரும்புகின்றது.

## தும்புத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்



வடமேல் மாகாணத்தின் தும்புக் கைத்தொழில் நாட்டிலுள்ள பாரிய போட்டிக்குரிய வியாபாரங்களில் ஒன்றாகும். நாட்டின் தெங்குப் பயிர்ச் செய்கையில் 45% சதவீதத்திற்கும் மேல் வடமேல் மாகாணத்தில் இருக்கின்ற அதேவேளையில், நாட்டின் தெங்கு ஆலைகளில் 85% சத வீதம் வடமேல் மாகாணத்திலும் மேல் மாகாணத்திலும் இயங்குகின்றன. தென்னந் தும்பிலிருந்து அடிப்படை மூலப்பொருளாகப் பிரித்தெடுக்கப்படுகின்ற இந்தத் தும்பு நார்க் கைத்தொழிலானது, உலகச் சந்தையில் போட்டிக்குரிய நிலையை அடைந்துள்ள அதேவேளையில் உலகச் சந்தைக்கு புதிய போட்டியாளர்கள் பிரவேசித்தல், ஏற்றுமதிக் கட்டளைகளை நிரப்புவதிலுள்ள சிரமங்கள் (தென்னந் தும்பின் குறைந்தளவான வழங்கலும் காலங் கடந்த இயந்திர சாதனங்களும்), தொடர்புடைய தரப்பினர்களிடையேயான உறவை இழத்தல் மற்றும் வேலை வாய்ப்புக்கான குறைந்த பங்களிப்பு போன்ற சில சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டுறவு திட்டத்தின் பிரகாரம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையானது, கைத்தொழில் பணயப்பொருளாளர்களை ஒன்றிணைத்து அவர்களிடையே (ஏற்றுமதியும் விநியோகமும், உற்பத்தித் தயாரிப்பு மற்றும் மூலப் பொருள் மூலவளம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரினதும்) கூட்டிணைப்பை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை பணயப்பொருளாளர்களிடையே கூட்டிணைப்பை மேம்படுத்துவதற்கு தும்பு மாநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது.

அத்துடன் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையானது, அரசாங்க பெருந் தோட்டங்களின் சொந்தக்காரர்கள், தனியார் பெருந் தோட்டக் கம்பனிகள், தெங்க அபிவிருத்தி அதிகார சபை (CDA), தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் (CRI) மற்றும் தெங்கு வேளாண்மைச் சபை (CCB) மற்றும் ஏனைய தொடர்புடைய அரசாங்க, தனியார்த் துறை அமைப்புக்கள் என்பவற்றுடன் பணயப்பொருளாளர் கூட்டங்களை நடாத்தியுள்ள அதேவேளையில், எதிர்கால செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கு பொலிஸ் திணைக்களத்தின் பிரதிக் கண்காணிப்பாளர் நாயகம் (DIG), கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB), ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), தெங்கு வளர்ப்போர் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் போன்ற தொடர்புடைய அரசாங்க உத்தியோகத்தர்களையும் அழைக்கத் தீர்மானித்துள்ளது.

### கைத்தறி தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்:



மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கு 70 கைத்தறி இயந்திரங்களைத் தயாரிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 கைத்தறி நெசவாளர்களுக்காக வர்ணம், வடிவமைப்பு, வியாபார அபிவிருத்தி மற்றும் உற்பத்தி அபிவிருத்தி ஆகிய பகுதிகளில் கொள்திறன் அபிவிருத்தியை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை நடாத்தியுள்ளது. இது 2010 ஆம் ஆண்டில் பாலமுனை மற்றும் மருதமுனை ஆகிய இடங்களில் இடம்பெற்ற வாங்குநர் விற்பவர் சந்திப்புக்குப் பதிலளிப்பதற்காக நிறைவேற்றப்பட்டது.

## 06. தொழில் முயற்சியாளர்கள், வியாபார அபிவிருத்திச் சேவை வழங்கநர்கள் சந்திப்பு

### வியாபார அபிவிருத்திச் சேவைச் சந்தை:



தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டுறவு உபாயத் திட்டத்தின் பிரகாரம், வியாபார வர்த்தகச் சந்தை மற்றும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் சேவைச் சந்தைகள் பிராந்திய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சித் துறை அபிவிருத்தி நோக்கங்களுக்காக பிரேரிக்கப்பட்டன. அநேகமாக சகல சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களும் பிராந்தியத்திலும் நாட்டிலும் உள்ள வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்கள் பற்றியும் அதேபோன்று அவர்களினால் வழங்கப்பட்ட தொழிற்பாடுகள் மற்றும் சேவைகள் பற்றியும் அறியாதவர்களாக இருந்தனர் என்பதையும் அதனால் அவர்களிலிருந்து உயர்ந்தபட்ச சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அடையாளங் கண்டுள்ளது. தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களுக்கும் இடையிலுள்ள அந்த இடைவெளியை நிரப்பும் பொருட்டு ஒரு பலமான இணைப்பும் இடைத் தொடர்பும் உருவாக்கப்பட வேண்டும். வியாபாரச் சேவை வர்த்தகச் சந்தைகள் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களிலிருந்து உயர்ந்தபட்சச் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்

முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களுக்கும் இடையில் ஒரு பாலத்தை ஏற்படுத்தும். அது சாத்தியமான தொழில் முயற்சியாளர்களின் தொழில் முயற்சித்துவ ஆற்றலை உயர்த்தும்.

2011 இல் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் அகிய மாவட்டங்களில் வியாபார அபிவிருத்திச் சேவைச் சந்தைகளை நடாத்தியுள்ளது.

**உள்நாட்டு வியாபாரங்களை சர்வதேசமயப்படுத்தல்** - தொழில்நுட்பங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான அணுகுகை

சீனாவின் குவாங்ஹு நகரில் இடம்பெறும் தொழில்நுட்பங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களைக் காட்சிப்படுத்தக் கூடிய சர்வதேச ஏற்றுமதி இறக்குமதிச் சந்தைக்கு 37 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்களைப் பங்குபற்றந் செய்வதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஒழுங்கு செய்தது. அதில் ஒவ்வொரு அமர்விலும் 600,000 இற்கும் அதிகமான பார்வையாளர்கள் விஜயம் செய்தனர்.

வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களை பலப்படுத்தல்

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டுறவுத் திட்டத்தின் பிரகாரம் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் தேசிய வழிகாட்டியைத் தயாரித்து வெளியிடுதலும் உள்ளடங்குகின்றது. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்கநர்கள் தொழில்முயற்சியாளர்களின் செயலாற்றுகைக்கான சேவைகளை வழங்குவதற்கு பாரிய பங்களிப்பை ஆற்றுகின்றது. பல்வேறு வகையான வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தியடன் பிரதானமாக சந்தைப்படுத்தலுக்கான உதவிகள், தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் பரிமாற்றம், தொழில்முயற்சித்துவ அபிவிருத்தி, தகவல் தொழில் நுட்பம் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை ஐந்து படிமுறைகளில் நிறைவேற்றுவதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

1. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்.
2. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் தேசிய வழிகாட்டியைத் தயாரித்தல் (மென்பிரதி)
3. தேசிய வழிகாட்டியை வெளியிடுதல்.
4. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் தேவையான மதிப்பீடு.
5. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களை பலப்படுத்தல்.

1. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்.

நாட்டிலுள்ள எல்லா வகையான வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களையும் பதிவு செய்து, பத்திரிகை விளம்பரங்களினூடாக அவர்களுக்கு அறியச் செய்வதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. மேலும், சகல பிரதேச செயலகங்களக்கும் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கும் கடிதங்களையம் விண்ணப்பப் படிவங்களை அனுப்பவதன் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

2. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் தேசிய வழிகாட்டியைத் தயாரித்தல் (மென்நகல்)

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்துள்ள வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல் சேகரிக்கப்பட்டு, அவர்களுடைய பொதுவான தகவல்களும் சேவைகளும் கவனத்திலெடுக்கப்படுகின்றன. இந்த வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு விசேட படிவம் பயன்படுத்தப்படுகின்றது. இந்த வழிகாட்டி தொழில் முயற்சியாளர்களுக்கும் பிராந்திய மட்டத்தில் கிடைக்கப்பெறும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களுடைய சேவைகள் சம்பந்தமாக தொழில் முயற்சியாளர்கள் விழிப்புணர்வைப் பெறுவதற்கும் மிகவும் அத்தியவசியமானதாக இருக்கும்.

3. தேசிய வழிகாட்டியை வெளியிடுதல்.

வழிகாட்டி நூலொன்றாக இதனைத் தயாரித்து பிராந்திய மட்ட முன்னெடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக இந்த வழிகாட்டியை வெளியிடுவதற்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. முதலாவது கட்டத்தில் 5000 பிரதிகளை (சிங்களம் மற்றும் தமிழ்) தயாரித்து வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களுக்கும் அதேபோன்று தொழில் முயற்சியாளர்களுக்கும் விநியோகிக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

4. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்கநர்களின் தேவையான மதிப்பீடு.

வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் மனித வளத்தை நோக்காகக் கொண்டு தேவையான மதிப்பீட்டு வடிவமொன்றினூடாக வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் தேவையான மதிப்பீடு ஒன்றை நடாத்தி இந்தத் தகவலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மனித வள அபிவிருத்தியின் தேவைகளை அடையாளங் காணுவதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை விரும்புகின்றது.

5. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களை பலப்படுத்தல்.

தேவையான மதிப்பீட்டின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் பதவியினருக்காக திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடாத்த தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானிக்கும். 2011 ஆம் அண்டில் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களிடமிருந்து பதிவுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

## 07. விசேட செயற் திட்டங்கள்

### ‘‘ஹெகியாவட்ட ரெகியாவக்’’ நிகழ்ச்சித் திட்டம்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களையும் தேவையான தொழில் வழங்குநர்களையும் அடையாளங் காணுவதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஒரு செயற் திட்டத்தை ஆரம்பித்தது. ‘‘ஹெகியாவட்ட ரெகியாவக்’’ நிகழ்ச்சித் திட்டங்களினூடாக பிராந்தியங்களின் மாவட்டங்கள; தொழில் சந்தையொன்றை நடாத்துவதன் மூலம் தேவையான தொழில் வழங்குநர்களுக்கு பொருத்தமான இளைஞர்கள் அறிமுகப்படுத்தப்படுவர். முதலீட்டுச் சபையின்


கூட்டிணைப்புடன் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் மாத்திரம் அண்ணளவாக 2000 வேலை வாய்ப்புக்களை அடையாளங் கண்டுள்ளது. எவ்வாறாயினும் முதலாவது முயற்சி அதாவது மன்னார் மாவட்டத்திலிருந்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை அறிமுகப்படுத்துவது, அவர்கள் விருப்பமில்லாமல் மாவட்டத்திலிருந்து அப்பால் செல்லுகின்ற படியினால் வெற்றியடையாமல் இருந்தது. எனவே இந்த நிகழ்ச்சித் திட்டமானது, இளைஞர்கள் அப்பால் செல்லுவதற்கு விரும்பவார்களா என்பது பற்றி ஆரம்ப ஆய்வு ஒன்றைச் செய்த பின்னர் ஏனைய பிராந்தியங்களில் அது மீண்டும் செய்யப்படும்.


## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் சம்பந்தமான தகவல்களைச் சேகரிப்பதற்கு பத்திரிகையில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. சாத்தியமான நன்கொடை உதவிகளுக்கான பிரேரணைகளைத் தயாரிப்பதற்கு உசாவலர்கள் தொண்டர்களாக நியமிக்கப்பட்டனர். வடக்கு மற்றும் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலிருந்து பாதிக்கப்பட்ட தொழில்முயற்சிகளிலிருந்து 2700 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

## 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | குறிப்பு | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| **ஆதனப் பொறியும் உபகரணங்களும்** | **10** | 6,600,495.42 | 3,133,495.28 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| **முற்பணம் செலுத்துதல்** | | 15,000.00 | 15,000.00 |
| **முற்பணங்கள்** | | 228,800.00 | 70,000.00 |
| **பணம் மற்றும் வங்கி நிலுவைகள்** | | 1,998,625.12 | 1,937,086.86 |
| **பண்டிகை முற்பணம்** | | 12,000.00 | 11,000.00 |
| அலுவலக வாடகை மீதான வைப்பு | | 799,380.00 | |
| முற்கொடுப்பனவு | **11** | 84,164.86 | |
| | | **9,738,465.40** | **5,166,582.14** |
| **ஓப்புரவும் கடன் பொறுப்புக்களும்** | | | |
| மூலதனப் பங்களிப்பு | **12** | 13,229,838.47 | 9,510,429.65 |
| **திரட்டிய இலாபம் / (நட்டம்)** | | (4,948,495.54) | (3,148,528.05) |
| **வருடக் காலத்தில் இலாபம் / (நட்டம்)** | | 507,710.61 | (1,799,967.49) |
| | | 8,789,053.54 | 4,561,934.11 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| **பாடசாலைப் போட்டிக்காக இலங்கை வங்கியிடமிருந்து கிடைத்தவை** | | 53,010.58 | 128,010.58 |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| **சேர்க்கப்பட்ட செலவுகள்** | **13** | 896,401.28 | 476,637.45 |
| **மொத்த ஓப்புரவும் கடன் பொறுப்புக்களும்** | | **9,738,465.40** | **5,166,582.14** |





**ஏன். எம். ஷஹீட்**
தலைவர் / பணிப்பாளர் நாயகம்

**கே. பீ. லியனகே**
கணக்காளர்

**2011 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்க்கான வரவு செலவுக் கூற்றுக்கள்**

| | குறிப்பு | **2011** | **2010** |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வரவு | | | |
| பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட மீண்டெழும் மாணியம் | | 19,464,000.00 | 8,920,000.00 |
| ஏனைய வரவுகள் | **1** | 126,525.86 | 5,505.72 |
| வருடத்திற்கான மூலதன மாணிய வேறுபாடு | | 21,305,591.18 | 10,195,518.12 |
| மொத்த வரவு | | 40,896,117.04 | 19,121,023.84 |
| கழித்தல் :- தொழிற்பாட்டுச் செலவுகள் | | | |
| பதவியினருக்கான வேதனாதிகள் | **2** | 8,421,367.12 | 6,035,129.56 |
| நிருவாகச் செலவுகள் | **3** | 8,257,656.80 | 2,747,591.41 |
| போக்கு வரத்துச் செலவுகள | **4** | 377,061.24 | 669,341.50 |
| பராமரிப்புச் செலவுகள் | **5** | 582,954.20 | 97,554.08 |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள் | **6** | 1,421,046.00 | 1,135,581.49 |
| மதிப்பிறக்கம் | **7** | 1,976,812.49 | 1,387,942.49 |
| அபிவிருத்திச் செலவுகள் | **8** | 19,328,778.69 | 8,807,576.63 |
| மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள் | | **40,365,676.54** | **20,880,717.16** |
| | | | |
| தொழிற்பாட்டுச் செலவுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற மிகை / (பற்றாக்குறை) | | 530,440.50 | (1,759,693.32) |
| | | | |
| கழித்தல் - நிதிச் செலவு | **9** | 22,729.89 | 40,275.17 |
| | | | |
| காலப் பகுதிக்கான தேறிய மிகை / (பற்றாக்குறை) | | **507,710.61** | **(1,799,968.49)** |
| கூட்டுதல் :- | | | |
| முன்னைய வருடத்திற்கான தேறிய மிகை / (பற்றாக்குறை) | | (4,948,495.54) | (9,462,092.25) |
| கழித்தல் ;- முன்னைய வருடத்திற்கான சரி செய்தல் | | | 6,313,564.20 |
| முன் கொண்டு வரப்பட்ட தேறிய மிகை / (பற்றாக்குறை) | | **(4,440,784.93)** | **(4,948,495.54)** |
| | | | |

**2011 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்க்கான பண ஓட்டக் கூற்றுக்கள்**

| | குறிப்பு | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான பண ஓட்டம்** | | | |
| **மிகை / (பற்றாக்குறை)** | | 507,710.61 | (1,799,967.49) |
| **பணம் அல்லாத அசைவுகள்** | | | |
| **சேர்க்கப்பட்ட செலவுகள்** | | 419,763.83 | (6,164,787.55) |
| **மதிப்பிறக்கம்** | | 1,976,812.49 | |
| **முன்னைய வருட சரி செய்தல்** | | - | 6,313,564.20 |
| **முற்பணங்கள்** | | (158,800.00) | (70,000.00) |
| **பண்டிகை முற்பணம்** | | (1,000.00) | (7,000.00) |
| **முற்பணக் கொடுப்பனவுகள்** | | - | |
| அலுவலக வாடகை மீதான வைப்பு | | (799,380) | |
| முற்கொடுப்பனவு | | (84,164.86) | |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய பண ஓட்டம் (அ)** | | **1,860,942.07** | **(1,728,190.84)** |
| முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான பண ஓட்டம் | | | |
| **கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள்** | | (5,443,812.63) | (250,557.16) |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய பண ஓட்டம் (ஆ)** | | **(5,443,812.63)** | **(250,557.16)** |
| **நிதியிடல் நடவடிக்கைகளின் மூலமான பண ஓட்டம்** | | | |
| **திறைசேரியிலிருந்து கிடைத்த முலதன மாணியம்** | | 25,025,000.00 | 9,600,000.00 |
| **பாடசாலைப் போட்டிக்காக இலங்கை வங்கியிடமிருந்து கிடைத்தவை** | | (75,000.00) | |
| **மூலதன மாணியம் தொடர்பாகச் செலுத்தப்பட்ட அபிவிருத்திச் செலவுகள்** | | (21,305,591.18) | (8,807,575.63) |
| **நிதியிடல் நடவடிக்கைகளின் மூலமான தேறிய பண ஓட்டம் (இ)** | | **3,644,408.82** | **792,424.37** |
| **பணத்தில் பணத்திற்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / குறைவு (அ) + (ஆ) + (இ)** | | 61,538.26 | (1,186,323.63) |
| **2011 சனவரி 31 இல் உள்ளவாறான பணம், பணத்திற்கு சமமானவை** | | 1,937,086.86 | 3,123,410.49 |
| **2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பணம், பணத்திற்கு சமமானவை** | | **1,998,625.12** | **1,937,086.86** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு

### 01. பொது

அ) இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய வருடத்தில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்துப்போகின்ற அதேவேளையில், கொள்கைகளின் மாற்றங்கள் பொருத்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆ) முன்னைய வருடத்துடன் தொடர்புபட்ட பெருமானங்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுவதற்கு வசதியளிப்பதற்காக அவசியமான இடங்களில் காட்டப்பட்டுள்ளன.

இ) திறைசேரியிலிருந்து கிடைத்த மாணியங்கள் மூலதனம் மற்றும் மீண்டெலும் செலவுகள் என அடையாளங் காணப்பட்டு அதற்கேற்ப கணக்குக் காட்டப்பட்டுள்ளன.

### 02. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

தொட்டுணரக் கூடிய சொத்துக்கள் செலவு குறைந்த திரட்டிய மதிப்பிறக்கத்தில் காட்டப்படுகின்றன. நிலையான சொத்துக்களின் மதிப்பிறக்கம் நேர் கோட்டு முறையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

முழுமையான மதிப்பிறக்கம் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தில் அறவிடப்படுகின்றது. விற்பனை செய்யப்பட்ட வருடத்தில் அறவிடப்படுவதில்லை.

மதிப்பிறக்கத்தின் வீதங்கள் பின்வருமாறு :-

| | |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 12.5 % |
| தளபாடம் | 10 % |
| கணினி மற்றும் துணைப் பாகங்கள் | 25 % |
| மோட்டார் வாகனங்கள் | 20 % |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | 10 % |

### 03. பணமும் பணத்திற்குச் சமமானவையும்

பணமும் பணத்திற்குச் சமமானவையும் கையிருப்பிலுள்ள பணம் மற்றும் 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி நிலுவையையும் உள்ளடக்குகின்றது.

### 04. பொறுப்புக்கள்

நடைமுறைப் பொறுப்புக்கள் என்பது கேள்வி வருடத்தினுள் அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய செலவுகளாகும். நடைமுறையல்லாத

பொறுப்புக்கள் என்பது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கும் பார்க்கக் கூடுதலான காலத்திற்குள் செலுத்த வேண்டிய செலவுகளாகும்.

**05.** பணிக்கொடை

ஐந்து வருடத்திற்கும் மேலான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த நிரந்தரப் பதவியினர் இல்லாதபடியினால் 2011 ஆம் ஆண்டில் பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக ஒதுக்கீடுகள் அறவிடப்படவில்லை.

**06. வருமானம் மற்றும் செலவினம்**

வருமானம் மற்றும் செலவினம் என்பன தொகை ஏற்றத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**08.** வேறுபட்ட மூலதன மாணியம்

திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மொத்த மூலதன மாணியங்களும் ''மூலதனப் பங்களிப்புக் கணக்குக்கு'' வரவு வைக்கப்பட்டது. வருடத்துடன் தொடர்புபட்ட வேறுபட்ட பகுதி (மதிப்பிறக்கம் மற்றும் அபிவிருத்திச் செலவுகளுக்காக ஏற்பட்ட மொத்தச் செலவு என்பவற்றுக்குச் சமனான தொகை) வரவு செலவுக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளன.

**09. வரி விதித்தல் -**

**வருமான வரி**

அதிகார சபையானது ஒரு நியதிச் சட்டமுறைச் சபையாக இருக்கின்ற படியினால் கணக்குகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வில்லை. அது திறைசேரியிலிருந்து மாணியத்தைப் பெறுகின்றது.

**10. கூட்டுறவுத் தகவல்**

| | | |
|---|---|---|
| அமைப்பின் பெயர் | : | தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை |
| சட்ட வடிவம் | : | 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |
| தொழிற்பாடுகளின் தன்மை | : | நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு விசேட கவனத்தைச் செலுத்தி இலங்கைக்குள் தொழில்முயற்சி அபிவிருத்தியை மேம்படுத்துதல், ஆதரவளித்தல், ஊக்குவித்தல், மற்றும் வசதியளித்தல் |

தேசிய தொழில் முயற்சி மன்றம்:

மேற்குறிப்பிட்ட மன்றமானது பல்வேறு பணயப்பொருளாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் மட்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது. தேசிய ரீதியில் அடையாளங் காணப்பட்ட வியாபார விடயங்களும் கட்டமைப்பின் அடி மட்டங்களில் தீர்க்கப்படாததுமான விடயங்களும் தேசிய தொழில் முயற்சி மன்றத்தில் கலந்துரையாடப்படுகின்றன. இது வரையில் மூன்று கூட்டங்கள் நடாத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு :

i. தொழில் முயற்சிகளுக்கான மின்சாரத்தின் வரையறை
ii. பாடசாலையை விட்டு வெளியேறியவர்களின் தொழில் முயற்சி ஆற்றல்களை மேம்படுத்துதல்.
iii. கால்நடைக் கொள்கையும் தொழில் முயற்சிகளுக்கான அதன் பிரயோகத் தன்மையும்.
iv. தொழில் முயற்சிகளுக்கான சிறந்த சேவைகளை வழங்குவதற்கு அரசாங்க தனியார் கலந்துரையாடல; (PPD)
v. அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்ட மட்டங்களில் வியாபாரப் பதிவின் தாமதங்கள்
vi. அநுராதபுரத்தில் வியாபாரங்களுக்கான காணிப் பதிவின் சாத்தியமின்மை
vii. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்கான கடன் வீத முறைமை

மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்கள்

தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதற்காக மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்கள் தாபிக்கப்படுகின்றன. மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்கள் மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்படுகின்றன. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, அநுராதபுரம், காலி, யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை, மொனராகலை, பொலநறுவை, மன்னார். கண்டி, மாத்தளை, அம்பாறை, மட்டக்களப்பு, பதுளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களைத் தாபித்துள்ளன.

**நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :**

- மாவட்ட மட்டத்தில் உள்ள வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களிடையே உறவுகளைக் கட்டியெழுப்புதல
- அரசாங்க தனியார் கலந்துரையாடல்களுக்கு உதவுதல் (PPD)
- மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி அமைப்புக்களுக்கிடையில் சரியான கூட்டிணைப்பைத் தாபித்தல்
- மாவட்டத் தொழில் முயற்சி மன்றங்களினூடாக தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதற்கு ஒரு முறையை விருத்தி செய்தல்
- மாவட்ட மட்ட மன்றங்களிலிருந்து தேசிய மட்ட மன்றங்கள் வரையான வியாபார விடயங்களைச் சேகரித்தல்.

**சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி வழிகாட்டி நூல்**

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி வழிகாட்டி நூல் 2011-1012 இனை மீளாய்வு செய்து வெளியிட்டது. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்கள் நிறுவனங்களைத் தேடுவதற்காக தமது பெறுமதியான நேரத்தை வீணடிக்காமல் உள்நாட்டில் சேவைகளைப் பெறுவதற்கு எங்கு போக வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு இது ஒரு சிறந்த தகவல் மூலமாக இருக்கின்றது.

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தள அபிவிருத்தி**

கொள்ளளவை அதிகரிப்பதற்காகவும், தரத்தை மேம்படுத்துவதற்காகவும் தகவல்களை அடைவதற்காகவும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் மீளமைக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார வலையம்**

கமட்ட ஒபின் வியாபாரய

"கமட்ட ஒபின் வியாபாரய" கிராம மட்டத்தில் வியாபாரத்தை மேம்படுத்துவதாகும். மஹிந்த சிந்தனை வழியில் முன்நோக்கிச் செல்வதற்கு நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை மேம்படுத்தவதற்கு விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

ஹெகியாவட்ட ரெகியாவக்

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பொருத்தமான வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் தேவையான தொழில் வழங்குநர்களும் அடையாளங் காணப்படுகின்றனர். பிராந்தியங்களின் மாவட்டங்களpy; தொழில் சந்தையொன்றை நடாத்துவதன் மூலம் தேவையான தொழில் வழங்குநர்களுக்கு வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அறிமுகப்படுத்தப்படுவர்.

**தொழில்முயற்சியாளர் அபிவிருத்திப் பயற்சி நிகழ்ச்சித் திட்டம்**

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, அவர்களுடைய தொழில் நுட்ப அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கு பல்வேறு பிராந்தியங்களில் தொழில் நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தத் திர்மானித்துள்ளது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, உள்நாட்டு போட்டிக்குரிய நன்மை (LOCA) நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கள அவதானிப்புகளினூடாக தொழில் நுட்பப் பயிற்சித் தேவைப்பாடுகளை அடையாளங் கண்டுள்ளது.

**தொழில்முயற்சித்துவ அபிவிருத்திப் பயற்சி நிகழ்ச்சித் திட்டம்**

கூட்டுறவுத் திட்டத்தின் பிரகாரம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் மாவட்டச் சம்மேளனம் ஆகியவற்றின் ஆதரவுடன் பிராந்திய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்காக வியாபார அபிவிருத்திப் பயற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது.

நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள், அவர்களது பொருட்களினதும் சேவைகளினதும் தரத்தையும் வினைத் திறனையும் மேம்படுத்துதல், பங்குபற்றுநர்களின் தொழில்முயற்சித்துவத் திறன்களை மேம்படுத்துதல், அவர்களுடைய இலாபங்களை மேம்படுத்துதல், முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துதல், நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் என்பனவாகும்.

**“திவி நெகும”**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு என்பன திவி நெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ‘‘திவி நெகும’’ குடிசைக் கைத்தொழில் தொகுதி மேம்பாட்டுக் கண்காட்சிகளை ஒழுங்குசெய்துள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இந்தக் கண்காட்சிக்குப் பங்களிப்புச் செய்யுமாறு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்தக் கண்காட்சியானது 21 மாவட்டங்களுக்காகவும் திட்டமிடப்பட்டள்ள அதேவேளையில் 13 கண்காட்சிகள் இந்த ஆண்டில் நடாத்தப்படவிருக்கின்றன.

**தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம்**

இலங்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் (TDF) ஒன்றைத் தாபிப்பதற்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றைத் தயாரித்து அதனை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு அனுப்பியுள்ளது. அதன் பெறபேறாக தொழில்நுட்பப் பரிமாற்றத்தினூடாக ஆய்வினை வர்த்தகமயப்படுத்துவது தொடர்பான ஒரு செயற்குழு தாபிக்கப்பட்டது. அதே நேரத்தில் மலேசிய தொழில்நுட்ப அபிவிருத்திக் கூட்டத்தாபனத்திடமிருந்து (MTDC) தொழில் நுட்ப உதவியைப் பெறும் சாத்தியத் தன்மை குறித்து தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆராய்ந்தது. மலேசிய தொழில்நுட்ப அபிவிருத்திக் கூட்டத்தாபனம் இலங்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதன் சாத்தியத் தன்மையைப் பரிசோதிக்கும் பிரேரணையொன்றை சமர்ப்பித்தது. அதன் பின்னர் அது, செயற்குழுவின் சிபாரிசுக்காக அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Njrpa njhopy; Kaw;rp mgptpUj;jp mjpfhurigapdhy; 2011 Mk; Mz;by; gpd;tUk; eltbf;iffisg; பூர்த்தி செய்துள்ளது.


- NCCI யின் ஒத்துழைப்புடன் மொரட்டுவை மரத் தளபாடத் தொகுதிக்கான சுய உதவிப் பொது அமைப்பாக சோ மில்லர்ஸ் அசோசியேஷன், வுட் வேர்க்ஷொப் ஓனர்ஸ்


அசோசியேஷன் மற்றும் பேனிஷர் ஷொப் ஓனர்ஸ் / ட்ரெடர்ஸ் அசோசியேஷன் ஆகியவற்றை ஒன்று செர்ப்பதன் மூலம் மொரட்டுவ யுனைடட் வுட் கிராப்ட் அசோசியேஷன் தாபிக்கப்பட்டது.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுடன் மொரட்டுவை மற்றும் வேவல்தெனிய தொகுதிகளின் விசேட தரவுத்தள அபிவிருத்தி தொடர்பாக நகர திட்டமிடலாளர் அவையினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை மதிப்பீடு செய்யப்பட்டது.
- பணயப்பொருளாளர்களின் ஒத்துழைப்புடன் மொரட்டுவை மரத் தளபாடத் தொகுதியின் அபிவிருத்திக்கான முகாமைத்துவக் கம்பனியொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- திரு. ப்ரொகோனி அவர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அவுஸ்திரேலிய நிறுவனமான VAM நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் கட்டபெத்தயிலுள்ள மர வேலைப் பயிற்சி நிலையத்தை சர்வதேச மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கு ஒரு செயற் திட்டப் பிரேரணையை விருத்தி செய்வது தொடர்பாக கைப்பணிச் சபை, அரசாங்க மரக் கூட்டத்தாபனம், இலங்கை தேசிய கைப்பணிகள் சபை, கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மற்றும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு அகியவற்றுடன் கூட்டங்கள் ஒழங்கு செய்யப்பட்டன.
- மொரட்டுவை மரத் தளபாடத் தொகுதியை கைத்தொழில் மற்றம் வணிக அமைச்சின் விசேட பொருளாதார வலயமாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பான வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களை வரைதல்
- தொகுதி அபிவிருத்திக்கான அபிவிருத்தி பங்காளர்கள் அடையாளங் காணப்பட்டு அவர்களுடன் ஆரம்பக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- இலங்கை தேசிய கைப்பணிகள் சபையின் (NCCSL) ஆதரவுடன் மொரட்டுவ யுனைடட் வுட் கிராப்ட் அசோசியேஷனைப் பதிவு செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- மொரட்டுவைப் பல்கலைக் கழகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் SEEDS என்பவற்றின் பங்கபற்றுதலுடன் அபிவிருத்தி பங்காளர் மாநாடு இடம்பெற்றன. இந்த மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டுள்ள தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அந்தந்த ஆக்கக் கூறுகளைச் செயற்படுத்துவதற்கு அபிவிருத்தி பங்காளர்களுடன் கைச்சாத்திடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- தளபாடத் தொகுதி அபிவிருத்தியிலுள்ள பொதுவான பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கான தகவலை அடையாளங் காணுவதற்காகவும் தளபாடத் தொகுதி அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் மொரட்டுவ

யுனைடட் வுட் கிராப்ட் அசோசியேஷன் ஆகியோருடனான ஒரு நாள் செயலமர்வு பூர்த்தி செய்யப்பட்டது.

- பிங்கிரிய, கம்பஹா, தங்கொட்டுவ, நீர்கொழும்பு, மற்றும் குளியாப்பிட்டிய அகிய இடங்களில் நான்கு (04) சிறிய தளபாடக் கண்காட்சிகளை நடாத்தியது.





மீண்டெழும், மூலதனச் செலவினத்திற்கான அரசாங்க மாணியம்
Mn.
30
25
20
15
10
5
0
2009
2010
2011
Year
Recurrent
Capital

ரீசீ/டீ/என்ஈடீஏ/2011/எப்ஏ/ஏ/02 2012 திசெம்பர் 31

தலைவர்,

தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை

**தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2012 ஒக்டோபர் 26 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் முறையான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மை

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், பிரமாணங்கள் | விதிகள், | இணக்கமின்மை |
| --- | --- | --- |

முதலியவற்றுடனான தொடர்பு

| ------------------------------------------------------- | ------------------------------ |
| --- | --- |
| (அ) 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவு | உரிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க அதிகாரசபையினால் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி நிதியம் தோற்றுவிக்கப்பட்டு தொழில்நுட்ப அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட அல்லது கிடைக்கின்ற அனைத்து பணமும் செலவுவைக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| 5.2.1 ஆம் பிரிவு | சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க ஷவில்லை. |
| 6.5.1 ஆம் பிரிவு | 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றக்கள் 2012 யூன் 28 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்ப ட்டிருந்தன. அதாவது 04 மாத தாமதத்தின் பின்னரே. |

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------------------

### 3.1 நிதிசார் மீளாய்வு

--------------------------

#### 3.1.1 நிதிசார் விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு அதிகாரசபையின் செயற்பாடுகள் ரூபா 530,441 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,759,693 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகள் ரூபா 2,290,134 சாதகமான முன்னேற்றத்தினை விளைவித்துள்ளது.

#### 3.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

---------------------------------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான அபிவிருத்திச் செலவுகள் ரூபா 10,521,203 இனால் அல்லது 120% இனால் அதிகரிக்கப்பட்டிருந்தும் மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியம் மற்றும் பிற்போட்ட மூலன வருமானம் ரூபா 21,654,073 இனால் அல்லது 113% ஆல் அதிகரித்தல் இச்செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 2,290,134 தொகையான சாதகமான முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 பெப்ரவரி 04 ஆந் திகதி அப்போதிருந்த தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒரு வாகனம் அவர் நாட்டுக்கு வெளியே இருந்த சந்தர்ப்பத்தின் போது சாரதியற்ற நபர் ஒருவரினால் ஓட்டிச் சென்ற போது விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்தில் ஏற்பட்ட நட்டம் குறித்த நபரினால் ஏற்கப்பட்டது என்பதனாலும் அதன் மூலம் அதிகாரசபைக்கு நிதிசார் நட்டம் ஏற்படவில்லை எனவும் கருதி மிகுதி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அரசாங்க நிறுவனத்தின் ஏதாவது சொத்து விபத்திற்கு உள்ளாகும் வேளையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை நி.பி 101 இலிருந்து 113 வரை உள்ளதனால் விபத்துக்குரிய பொறுப்பான நபரினை நிர்ணயித்தல், நட்டத்தின் அளவினை நிர்ணயித்தல், நட்டத்தினை அறவிடும் முறைமை, பொலிஸ் அறிக்கையின் பிரதியினைப் பெற்றுக்கொள்ளல் முதலியவாறான முறையான நடவடிக்கைகள் எதுவும் அதிகாரசபையினால் இந்த விபத்து தொடர்பாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து ஆலோசகரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது ஆலோசனைக் கட்டணமாக ஒரு மாதத்திற்கு ரூபா 60,000 படி ரூபா 720,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய ஆலோசகரினால் வழங்கப்பட்ட சேவைகள், அவரினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வைகள் அல்லது திட்டமிடல் நடவடிக்கைகள் முதலியவற்றினை உள்ளடக்கிய அறிக்கை 2011 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படாதிருந்ததனால் செலுத்தப்பட்ட இந்த ஆலோசனைக் கட்டணம் அதிகாரசபைக்கு விளைவற்ற செலவு என்பதனை கணக்காய்வில் மறுக்கமுடியாதுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் தனியார் சம்பனிக்குச் சொந்தமான கட்டிடத்தில் 4,441 சதுர அடிக்காக ரூபா 4,382,072 செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட அலுவலக வளவினை அறைகளாகப் பிரித்தல் முதலியவை தொடர்பாக ரூபா 3,240,149 தொகை அதிகாரசபையின் நிதிகளிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

------------------------------------------------------

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 15 நடவடிக்கைகளுக்காக ரூபா 23 மில்லியன் பெறுமதி ஒன்று காட்டப்பட்டிருந்தும் வருடாந்த மதிப்பீட்டில் 2107 ஆம் செலவு விடயத்தின் (ஏனைய செலவுகள்) கீழ் 10 விடயங்களுக்காக எதுவித மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டிணைந்த திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுதிக்கான தொழில் முயற்சி அபிவிருத்தி நோக்கெல்லை உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 03 ஆவது செயற்பாடாகக் காட்டப்பட்டிருந்த விளைதிறனை மேம்படுத்தலின் கீழுள்ள விடயத்திற்காக வருடாந்த பாதீடாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 04 ஆவதுத செயற்பாட்டிற்காக ரூபா 0.5 மில்லியன் ஆண்டின் (Cleaner Production) இறுதி இரண்டு காலாண்டுகள் தொடர்பாகக் காட்டப்பட்டிருந்தது. எனினும் வருடாந்த பாதீட்டில் அதற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 05 ஆவது செயற்பாட்டிற்காக ரூபா 02 மில்லியன் 2011 ஆம் ஆண்டின் தொடக்க இரண்டு காலாண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் வருடாந்த பாதீட்டில் ரூபா 11.4 மில்லியன் 2011 ஆம் ஆண்டிற்குரியவையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் 06 ஆவது செயற்பாட்டின் 6.1 இலிருந்த 6.5 வரையான உப விடயங்கள் தொடர்பாக வருடாந்த பாதீட்டில் ரூபா 05 மில்லியன் வரை காட்டப்பட்டிருந்தும் ஒவ்வொரு விடயத்திற்கான நிதிசார் பெறுமதியினை குறிப்பிாக இணக்கம் செய்யும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 7 ஆவது மற்றும் 8 ஆவது செயற்பாடுகளுக்காக பணத்தினை ஒதுக்கீடு செய்தல் வருடாந்த பாதீட்டில் எந்த விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கிணங்க கூட்டிணைந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டமும் பாதீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

2011 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் காணப்பட்டிருந்தமையால் செலவு மதிப்பீடு செயற்திறனை முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக்கருவியாகப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பதவியணியினர்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) செலவுக் கட்டுப்பாடு

எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Nr/Sd*